தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 124 | 4 Pages | 2.12.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 124 | 4 பக்கங்கள் | 2.12.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அருவிளிந் தற்று**

**விளக்கம்:**
பெரிய செல்வம் வந்து சேர்தல், கூத்தாடும் இடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றது, அது நீங்கிப் போதலும் கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றது.

## இலங்கையில் கனமழை; பலி எண்ணிக்கை 15 ஆக உயர்வு



கொழும்பு, டிச.2

வங்கக்கடலில் உருவான பெஞ்சல் புயல் காரணமாக இலங்கையிலும் கனமழை பெய்து வருகிறது. கடந்த சில தினங்களாக இலங்கையில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக அங்குள்ள ஆறுகளில் நீர்மட்டம் அதிகரித்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

கிழக்கு கடலோர மாகாண பகுதிகளில் கனமழை வெளுத்து வாங்கி ஊருக்குள் வெள்ளம் புகுந்தது. கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கியும், வீடுகள் இடிந்தும் 12 பேர் பலியாகி இருந்தனர். பலர் மாயமாகினர்.

இந்தநிலையில் இலங்கையில் கனமழைக்கு பலியாகி மாயமான 3 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு கனமழைக்கு பலியானோர் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது. கட்டிட இடிபாடுகளில் சிக்கியும், வெள்ளத்தில் சிக்கியும் 20 பேர் காயமடைந்துள்ளனர். மாயமானவர்களை தேடும் பணி நடக்கிறது.

## ரஷியாவுக்கு வடகொரியா எப்போதும் ஆதரவு அளிக்கும்: கிம் ஜாங் அன்




பியாங்க்யாங், டிச.2

நேட்டோ கூட்டணியில் இணைய முயன்ற உக்ரைன் மீது ரஷியா 2022ம் ஆண்டு போர் தொடுத்தது. இந்த போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் செயல்படுகின்றன. அவை ஆயுத உதவி, பொருளாதார உதவிகளை உக்ரைனுக்கு வழங்குகின்றன. அதேபோல் ரஷியாவுக்கு அதன் நட்பு நாடான வடகொரியா ஆதரவாக உள்ளது. அதன்படி 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ராணுவ வீரர்களை ரஷியாவுக்கு வடகொரியா அனுப்பியது.

இரு நாடுகளுக்கிடையே கடுமையான போர் நிலவுவதாகல், 3ம் உலகப்போர் ஏற்படும் அபாயம் இருப்பதாக ஐ.நா. சபை மற்றும் பல நாடுகள் கவலை தெரிவித்தன. இந்தநிலையில் ரஷிய ராணுவ மந்திரி ஆண்ட்ரே பெலோசோவ் தலைமையிலான குழுவினர் வடகொரியா சென்று அந்த நாட்டின் தலைவர் கிம் ஜாங் அன்னை சந்தித்து பேசினர்.

அப்போது கிம் ஜாங் அன் கூறியதாவது, நேட்டோ கூட்டமைப்பின் பொறுப்பற்ற செயலுக்கு பதிலடி நடவடிக்கையே இந்த போர் ஆகும். எனவே உக்ரைனுக்கு எதிரான போரில் வடகொரியா எப்போதும் ரஷியாவுக்கு தனது ஆதரவை அளிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## ராஜஸ்தானில் மதமாற்ற தடை சட்டத்திற்கு மந்திரி சபை ஒப்புதல்



ஜெய்ப்பூர், டிச.2

கட்டாய மதமாற்றத்தை தடுக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்டுள்ள மதமாற்ற தடை சட்ட மசோதாவிற்கு ராஜஸ்தான் மந்திரி சபை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த சட்ட மசோதா எதிர்வரும் கூட்டத்தொடரில் சட்டசபையில் தாக்கல் செய்யப்பட உள்ளது. கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுவோருக்கு 1 முதல் 5 ஆண்டுகள் வரை சிறை தண்டனை உள்ளிட்ட கடுமையானதண்டனைகள்வழங்கப்படுவதை இந்த சட்டம் உறுதி செய்கிறது.

இது குறித்து ராஜஸ்தான் முதல்மந்திரி பஜன் லால் சர்மா 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ளபதிவில், "கட்டாயமதமாற்றத்தைதடுப்பதில்ராஜஸ்தான் மாநிலஅரசுஉறுதியாகஇருக்கிறது.இதன்படிசட்டமன்றத்தில்'ராஜஸ்தான் சட்டவிரோத மதமாற்ற தடை சட்ட மசோதா 2024' ஐ தாக்கல் செய்ய மந்திரி சபையில் முடிவு செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தவறான தகவல், மோசடி அல்லது கட்டாயத்தின் அடிப்படையில் ஒரு நபரின் மதத்தை மாற்றும் முயற்சியை இந்த சட்ட மசோதா தடை செய்கிறது. சட்டவிரோத மதமாற்றத்திற்காக ஒரு திருமணம் நடத்தப்பட்டால், அந்த திருமணத்தை செல்லாது என அறிவிக்கும் உரிமை குடும்ப நீதிமன்றங்களுக்கு வழங்கப்படும்" என்று பதிவிட்டுள்ளார்.

மேலும் இது குறித்து துணை முதல்மந்திரி பிரேம் சந்த் பைரவா கூறுகையில், "மக்கள் தங்களுக்கு அறிமுகமில்லாத மதங்கள் மீது கவர்ந்திழுக்கப்படுகிறார்கள். கட்டாய மதமாற்றத்தை தடுக்கும் விதமாக பிற மாநிலங்களில் இருக்கும் கொள்கைகளை பரிசீலித்து, கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனை வழங்கும் வகையில் இந்த சட்ட மசோதா உருவாக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

# மக்கள் தூக்கம் தொலைத்தது அதிமுக ஆட்சிக்காலம்: மு.க.ஸ்டாலின் விமர்சனம்



சென்னை, டிச.2

வங்கக்கடலில் உருவான பெஞ்சல் புயல் காரணமாக நேற்று முன்தினம் இரவு தொடங்கி நேற்று முழுவதும் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பலத்த காற்றுடன் கன மழை பெய்து வந்தது. இதனால் பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கியது. சாலைகளில் மழைநீர் பாய்ந்து ஓடியதால் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் கனமழை பாதிப்புகள் குறித்து சென்னை கொளத்தூர் தொகுதியில்தமிழகமுதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார். கொளத்தூர் செல்வி நகரில் மக்களை சந்தித்து பாதிப்புகள் குறித்தும், மழை நிவாரண பணிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வை தொடர்ந்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறியிருப்பதாவது: தூங்கி வழிந்த நிர்வாகத்தால் மனிதத்தவறுகளால் சென்னை மக்கள் தூக்கம் தொலைத்த இரவுகள் அதிமுக. ஆட்சிக்காலம். இயற்கைச் சீற்றத்தை எதிர்கொண்டு, ஓரிரவில் இயல்பு நிலைக்குத் திரும்பிடும் காலம், நமது திராவிட மாடல் ஆட்சிக்காலம்.

இயல்புநிலை திரும்பிய பகுதிகளைப் பார்வையிட்டபோது, மக்களின் அன்பையும் வாழ்த்துகளையும் பெற்றுக்கொண்டு, விழுப்புரம் திண்டிவனம் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச்சீர்செய்யக்களத்தில் பணியாற்றும் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்களுடன் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# முதல்அமைச்சரின் திமிர் பேச்சிற்கு மக்கள் தக்க பாடத்தை புகட்டுவார்கள்: எடப்பாடி பழனிசாமி



சென்னை, டிச.2

கொளத்தூரில் மழை வெள்ள பாதிப்புகளை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு செய்தார் . இதனைதொடர்ந்து மு.க.ஸ்டாலின் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது, எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமியின் குற்றச்சாட்டுக்கு உங்கள் பதில் என்ன என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவருக்கு குற்றச்சாட்டு வைப்பது வேலையாகப் போய்விட்டது. அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. எதிர்க்கட்சித் தலைவருக்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.என தெரிவித்தார் .

இந்த நிலையில் இதற்கு கண்டனம் தெரிவித்து எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் ,

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கொலை, கொள்ளை போன்ற சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளால் மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. போதைப்பொருள் புழக்கம் தலைவிரித்து ஆடுகிறது. இதுமட்டுமன்றி ஆசிரியர்கள், மருத்துவர்கள், நெசவாளர்கள், போக்குவரத்து ஊழியர்கள், தொழில்துறையினர் என அனைத்து தரப்பினரும் தெருவில் இறங்கி போராடும் சூழலே உள்ளது.

குற்றச்சாட்டு வைப்பதே எனக்கு வேலையாக போய்விட்டது" என்று கூறும் மு.க.ஸ்டாலின் அவர்களே விடியா திமுக ஆட்சியின் அவல நிலையை சுட்டிக்காட்ட வேண்டியது எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் என்னுடைய கடமை. அதற்கு முறையான நடவடிக்கை எடுத்து செயல்படுத்துவது அரசின் கடமை. அதை செய்யாத, தனக்கு எந்த திறமையும் இல்லாத ஒரு முதல் அமைச்சரிடம் இப்படிப்பட்ட மடைமாறும் பதிலைத்தான் எதிர்பார்க்க முடியும்.

திமுகவிடம் நாகரிகத்தையோ, மக்கள் மீதான அக்கறையோ எதிர்பார்க்க முடியாது தான் என்றாலும், ஸ்டாலினின் சமீபத்திய தரக்குறைவான பேச்சுகளே அதற்கான மிகப் பெரிய சான்றாக அமைகிறது .நிர்வாகத் திறனற்ற முதல்அமைச்சர் முடிந்தால் மக்கள் பணி செய்யுங்கள்; இல்லையேல், நிர்வாகத் திறனில்லை என்று ஒப்புக்கொள்ளுங்கள்.ஆட்சி இருக்கிறது என்ற ஆணவச் செருக்கில் நீங்கள் பேசும் திமிர் பேச்சிற்கு மக்கள் தக்க பாடத்தை நிச்சயம் புகட்டுவார்கள். என தெரிவித்துள்ளார் .

# விஜய் அரசியலுக்கு வந்ததை வரவேற்கிறேன் தமிழகம் திரும்பிய அண்ணாமலை பேட்டி



சென்னை, டிச.2

லண்டனில் உள்ள 'ஆக்ஸ்போர்டு' பல்கலைக்கழகத்தில் 'சர்வதேச அரசியல்' என்ற தலைப்பிலான படிப்பை பயில, தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தேர்வானார். இதற்காக, கடந்த ஆகஸ்டு மாதம் 28ந் தேதி சென்னையில் இருந்து விமானம் மூலம், அண்ணாமலை இங்கிலாந்து புறப்பட்டு சென்றார். சர்வதேச அரசியல் படிப்பை பயின்று வந்த அதே காலக்கட்டத்தில், லண்டனில் பல்வேறு நிகழ்ச்சிகளில் அண்ணாமலை கலந்து கொண்டார். மேலும் அங்குள்ள தமிழக மாணவர்களை சந்தித்து, அண்ணாமலை கலந்துரையாடினார்.

இந்த நிலையில், சர்வதேச அரசியல் படிப்பை முடித்துவிட்டு இங்கிலாந்தில் இருந்து புறப்பட்டு இன்று மதியம் தமிழகம் வந்தடைந்தார் அண்ணாமலை. சென்னை விமான நிலையத்தில் அண்ணாமலைக்கு பாஜக நிர்வாகிகள், தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதன்பின்னர் அண்ணாமலை செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

அரசியல் படிப்பு தொடர்பாக ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் முன்னாள் பிரதமர்கள் பாடம் எடுத்தார்கள். 3 மாத காலம் எனக்கு கிடைத்த பாக்கியம். கடந்த 3 மாதங்களில் பாஜக உறுப்பினர்கள் சேர்க்கை வெற்றிகரமாக நடந்துள்ளது. உறுப்பினர் சேர்கைக்கு உழைத்த எச்.ராஜா உள்பட மூத்த தலைவர்களுக்கு நன்றி. தமிழக பாஜகவில் கிளைத் தலைவர் முதல் மாநில தலைவர் வரை தேர்தல் நடக்கிறது. 3 மாதங்களில் தமிழக அரசியல் களத்தில் பல மாற்றங்கள் நடந்துள்ளன. 2026 சட்டசபை தேர்தலுக்கு பாஜக தயாராகி வருகிறது.

அப்போதும் சொல்கிறேன்.. இப்போதும் சொல்கிறேன்.. அரசியலுக்கு வந்துள்ள விஜய்யை வரவேற்கிறேன். விஜய்யின் அரசியல் வருகை மக்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளது. திராவிட சிந்தாந்தத்தையே விஜய் பேசுகிறார்; புதிதாக ஒன்றும் இல்லை. அக்டோபர் மாதத்திற்கு பிறகு விஜய் எத்தனை முறை வெளியே வந்துள்ளார்.

தமிழகத்தில் திராவிட கட்சிகள் மூன்றாக பிரிந்துள்ளன. திராவிட கட்சிகளின் கொள்கையைத் தான் விஜயும் பேசுகிறார். பாஜகவை பொறுத்தவரை புதிய கட்சிகளுக்கு பயப்படாது. எங்கே விமர்சிக்க வேண்டுமோ, அங்கே விமர்சிப்போம். 2026 சட்டமன்றத் தேர்தல் சரித்திர தேர்தலாக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# விழுப்புரம், கடலூர், புதுச்சேரியில் மீட்புப்பணிகளை விரைவுபடுத்த வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, டிச.2

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வங்கக்கடலில் உருவான பெஞ்சால் புயல் கரையைக் கடக்கும் போது பெய்த கடுமையான மழையால் தமிழ்நாட்டில் விழுப்புரம், கடலூர் மாவட்டங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் மக்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கும் நிலையில், அவர்களின் பாதிப்புகளைக் களைய மாநில அரசுகள் போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாதது கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டில் மிக அதிக அளவாக திண்டிவனத்தில் 37.40 செ.மீ மழை பெய்திருக்கிறது. நேமூர் 35.20 செ.மீ, வல்லம் 32 செ.மீ. செம்மேடு 31 செ.மீ, வானூர் 24 செ.மீ மழை பெய்திருக்கிறது. இதனால், திண்டிவனம், மயிலம், மரக்காணம், வானூர் உள்ளிட்ட பகுதிகளில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. திண்டிவனம் நகரத்தில் கிடங்கல் ஏரி உடைந்து ஊருக்குள் தண்ணீர் புகுந்துள்ளது.

நகரின் பல பகுதிகள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. வீடூர் அணையிலிருந்து வினாடிக்கு 36 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டிருப்பதால் அப்பகுதியிலும் கடுமையானபாதிப்புகள்ஏற்பட்டுள்ளன. கடலூர் மாவட்டத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்திரு க்கிறது. பயிர்களுக்கும் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. மழையால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடுமையான பாதிப்புகளுக்கு அரசின் அலட்சியமும், செயலற்ற தன்மையும் தான் காரணம் ஆகும். திண்டிவனம் உள்ளிட்ட விழுப்புரம் மாவட்டத்தின் பல பகுதிகளில் வடிகால்கள் தூர்வாரப்ப டாததும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாததும் தான் இந்த நிலைக்கு காரணம் என்று கூறப்படுகிறது. தாழ்வான பகுதிகளில் வாழும் மக்களுக்கு அரசுத் தரப்பில் போதிய உதவிகள் வழங்கப்படாததால்,

சில இடங்களில் உணவு கூட கிடைக்காமல் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். புதுச்சேரி, விழுப்புரம் மாவட்டத்தின் எல்லைப்பகுதியான கோட்டக்குப்பத்தில் வெள்ளம் போல் தண்ணீர் தேங்கியிருப்பதால் பல்லாயிரக்கணக்கான வீடுகளில் வசிக்கும் மக்கள் வெளியே வரமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர். கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் மழை வெள்ளம் பாதித்தப் பகுதிகளில் மீட்புப் பணிகளை தமிழக அரசு விரைவுபடுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளை உடனடியாக வழங்க வேண்டும். பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களை கணக்கிட்டு உழவர்களுக்கும், பொதுவான பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ள பொது மக்களுக்கும் உரிய இழப்பீடுகளை வழங்க தமிழக அரசு வழங்க வேண்டும்.

புதுச்சேரி யூனியன் பிரதேசம் தான் புயலால் கடுமையான பாதிப்புகளுக்கு ஆளாகி உள்ளது. புதுச்சேரி நகரத்தில் மட்டும் 47 செ.மீ அளவுக்கு மழைபெய்திருப்பதால்ஒட்டுமொத்த நகரமும் வெள்ளக்காடாக மாறியிருக்கிறது. மாநில அரசின் சார்பில் உணவு வழங்குவதைத் தவிர ஆக்கப்பூர்வமான பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

புதுச்சேரியில் அனைத்துப் பகுதிகளிலும் தேங்கி நிற்கும் தண்ணீரை அகற்ற மாநில அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் தேசிய பேரிடர் மீட்புப் படையின் உதவியைக் கோர வேண்டும். மழை மற்றும் புயல் காற்றால் விழுந்துள்ள தென்னை மரங்களுக்கும், பாதிக்கப்பட்ட பிற பயிர்களுக்கும் உரிய இழப்பீட்டை வழங்கவும் புதுச்சேரி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி


# வியாசர்பாடியில் மின்சாரம் தாக்கி இளைஞர் உயிரிழப்பு: பலி எண்ணிக்கை 3ஆக உயர்வு

சென்னை, டிச.2

சென்னையில் ஃபெஞ்சல் புயல் காரணமாக கனமழை பெய்து வருகிறது. இதனால், பல்வேறு பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கி உள்ளது.

இந் நிலையில், சென்னை வியாசர்பாடி கணேசபுரம் பகுதியில் சுரங்கப்பாதையில் தேங்கிய தண்ணீரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இசைவாணன் என்பவர் மின்சாரம் பாய்ந்ததில் உயிரிழந்து உள்ளார். கொளத்தூரை சேர்ந்த அவர், 50 எச்.பி. மோட்டாரை இயக்கியபோது இந்த விபத்து ஏற்பட்டு உள்ளது.

அவருடைய உடல் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டு உள்ளது. இதனால், சென்னையில் மின்சாரம் பாய்ந்து இன்று ஒரே நாளில் 3 பேர் பலியாகி உள்ளனர்.

இதேபோல் சென்னை வேளச்சேரியில்விஜயநகர் 2வது தெருவில் புயல் மற்றும் மழை எதிரொலியாக, மின் கம்பி அறுந்து விழுந்தது. இதில் அந்த வழியே நடந்து சென்ற சக்திவேல் (வயது 45) என்பவர் மீது அந்தகம்பிவிழுந்துள்ளது. இதில், அவர் உயிரிழந்து உள்ளார்.

இதுபற்றி அறிந்ததும் உடனிருந்தவர்கள் உடனடியாக அவருடைய உடலை மீட்டு ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பிராட்வே பகுதியில் வடமாநில வாலிபர் ஒருவர் இன்று காலையில், ஏ.டி.எம். மையத்துக்கு சென்றபோது, மின்சாரம் பாய்ந்து உயிரிழந்த நிலையில், வேளச்சேரியில் மற்றொரு நபர் மின்சாரம் பாய்ந்து உயிரிழந்து உள்ளார்.

# திருச்செந்தூர் கடல் 80 அடி உள்வாங்கியது

திருச்செந்தூர், டிச.2

அறுபடை வீடுகளில் 2ம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் கடற்கரை அருகில் அமைந்துள்ளது. இந்த கோவில் கடலானது அமாவாசை, பவுர்ணமி உள்ளிட்ட நாட்களில் உள்வாங்குவதும் சில நேரங்களில் கடல் சீற்றம் அதிகமாக காணப்படுவதும் வழக்கமாக இருந்து வருகிறது.கடந்த 2 நாட்களுக்கு முன்பு கடல் உள்வாங்கி காணப்பட்டது.



இன்று அமாவாசை தினம் என்பதால் கடல் சுமார் 80 அடி தூரம் வரை உள்வாங்கி காணப்படுகிறது. இதனால் கடல் அலைகளின்றி குளம் போல் காட்சியளித்து பச்சை நிற பாசிப்படிந்த பாறையில் வெளியே தெரிகிறது. பக்தர்கள் பாறை மீது ஏறி நின்று செல்பி எடுத்து மகிழ்ந்து வருகின்றனர்.

# 7 மாவட்டங்களில் மருத்துவ முகாம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்

சென்னை, டிச.2

வங்கக்கடலில் உருவான ஃபெஞ்சல் புயல், காரைக்காலுக்கும், மாமல்லபுரத்துக்கும் இடையே புதுச்சேரி அருகே இன்று இரவுக்குள் கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இதன் காரணமாக சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் கனமழை முதல் அதி கன மழை வரை பெய்யக்கூடும்எனவானிலைமையம் எச்சரிக்கைவிடுத்துள்ளது.

அதன்படி சென்னை, செங்கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் நேற்றிரவு முதல் கன மழை பெய்து வருகிறது.

இதனால் பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கியுள்ளது. மக்கள் வீடுகளுக்குள் முடங்கி கிடக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.இந்த நிலையில், தமிழகத்தில் நாளை 7 மாவட்டங்களில் மருத்துவ முகாம் நடத்தப்படும் என அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய 7 மாவட்டங்களில் நாளை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை 500 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.

# ஃபெஞ்சல் புயல் காரணமாக சென்னையில் 55 விமானங்கள் ரத்து

கடலூர், டிச.2

வங்கக்கடலில் ஃபெஞ்சல் புயல் உருவாகி மாமல்லபுரம் காரைக்கால் இடையே கரையை கடக்கும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதன் காரணமாக வழக்கத்தை விட காற்றின் வேகம் 70 முதல் 90 கிலோ மீட்டர் வேகத்திலும், அதிக கனமழை பெய்யும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் புயல், மழை காரணமாக சென்னையில் 55 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. சென்னைக்கு வர வேண்டிய 19 விமானங்கள் மோசமான வானிலையால் வேறு விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்டன.

விமான நிலைய ஓடுபாதையில் குளம் போல் மழைநீர் தேங்கியுள்ளதால் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது. ஃபெஞ்சல் புயல் காரணமாக சென்னை விமான நிலையம் நாளை அதிகாலை 4 மணி வரை விமான மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஃபெஞ்சல் புயல் காரணமாக வங்கி தேர்வு ஒத்திவைப்பு

சென்னை, டிச.2

சென்னையில் இருந்து 90.கீமீ தொலைவில் மையம் கொண்டுள்ளது.வங்கித் தேர்வு எந்தத் தேதியில் நடைபெறும் என்பது பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.வங்கக்கடலில் ஃபெஞ்சல் புயல் உருவானதை அடுத்து, சென்னை உள்பட பல்வேறு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.புயல், சென்னையில் இருந்து 90.கீமீ தொலைவில் உள்ளதால் சென்னை உள்ளி ட்ட பல்வேறு பகுதியில் காற்றுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது.சென்னையில் நாளை நடைபெற இருந்த வங்கித் தேர்வுகளை IIB&F நிறுவனம் ஒத்திவைத்தது. வங்கித் தேர்வு எந்தத் தேதியில் நடைபெறும் என்பது பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு ள்ளது.

# ஏடிஎம்மில் மின்சாரம் தாக்கி வடமாநில வாலிபர் பலி

சென்னை, டிச.2

வங்கக்கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் இன்று மாமல்லபுரம் மரக்காணம் இடையே கரையை கடக்கும் என்றும் இதனால் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களி அதி கன மழை பெய்யும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருந்தது.

அதன்படி சென்னையில்நேற்றுஇரவுதொடங்கிய மிதமான மழை நேரம் செல்ல கனமழையாக தற்போது வரை பெய்து வருகிறது.இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி உள்ளது.

மழைநீரை அகற்றும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டாலும் தொடர் மழை காரணமாக மழைநீர் தேங்குகிறது. இதனை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சில பகுதிகளில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், முத்தையால் பேட்டையில் உள்ள ஏமிஎம்மில் பணம் எடுக்க சென்ற வடமாநில வாலிபர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். தனியார் வங்கி ஏடிஎம்மில் பணம் எடுக்கச் சென்ற உத்தரபிரதே மாநிலத்தை சேர்ந்த சந்தன் என்ற வாலிபர் இரும்பு கம்பியை பிடித்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் குறித்து முத்தையால் பேட்டை போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தாம்பரம் - கடற்கரை இடையேயான ரெயில் சேவை தற்காலிகமாக நிறுத்தம்

சென்னை, டிச.2

தென்மேற்கு வங்கக்கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் நாளை காலை கரையை கடக்கும் என்று வானிலைஆய்வுமையம் தெரிவித்துள்ளது. தற்போது ஃபெஞ்சல் புயல் மணிக்கு 10 கி.மீ வேகத்தில் நகர்ந்து வருகிறது. சென்னையிலிருந்து 100 கிலோ மீட்டர் தூரத்தில் புயல் மையம் கொண்டுள்ளது. இதன் காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சூறாவளி காற்றுடன் கன மழை பெய்து வருகிறது. இந்நிலையில் மின் கம்பி விழுந்ததால் தாம்பரம் கடற்கரை இடையிலான புறநகர் ரெயில் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஃபெஞ்சல் புயல் காரணமாக கனமழை கொட்டி



வரும் நிலையில் சென்னையில் புறநகர் ரெயில் சேவை குறைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# அரிட்டாப்பட்டி டங்ஸ்டன் சுரங்க விவகாரத்தில் தமிழக அரசு இரட்டை வேடம் ஏன்? அன்புமணி ராமதாஸ்

சென்னை, டிச.2

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்,மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்திற்குட்பட்ட அரிட்டாப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் 2015 ஏக்கர் பரப்பளவிலான பகுதிகளில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க அனுமதி அளிக்கப்பட்ட விவகாரத்தில் தமிழக அரசின் இரட்டை வேடத்தை மத்திய அரசு அம்பலப்படுத்தியுள்ளது. டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க ஒருபுறம் அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கி விட்டு, இன்னொரு புறம் அதை எதிர்ப்பது போல, திராவிட மாடல் அரசு நடத்தும் பிள்ளையைகிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டும் நாடகத்தை தமிழ்நாட்டு மக்கள்நம்ப மாட்டார்கள். அரிட்டாப்பட்டி பகுதியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கப்படுவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என்றும், அத்திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கோரி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரதமருக்கு கடிதம் எழுதிய நிலையில், அது



குறித்த சில விவரங்களை மத்திய சுரங்கத்துறை வெளியிட்டுள்ளது. "அரிட்டாப்பட்டி டங்ஸ்டன் சுரங்கம் ஏலத்தில் விடப்படுவதற்கு முன்பாக தமிழக அரசிடமிருந்து சில உள்ளீடுகள் பெறப்பட்டன. டங்ஸ்டன் சுரங்கத்தை ஏலத்தில் விடுவதற்கு வசதியாக அப்பகுதியில் உள்ள 47.37 ஹெக்டேர் பரப்பளவிலான கிரானைட் சுரங்கத்திற்கான குத்தகையை தமிழக அரசின் டாமின் நிறுவனம் திரும்ப ஒப்படைத்து விட்டது. ஏல நடவடிக்கை தொடங்கிய கடந்த பிப்ரவரி மாதத்திலிருந்து முடிவுகள் அறிவிக்கப்பட்ட 07.11.2024 ஆம் தேதி வரை டங்ஸ்டன் சுரங்கத்திற்கு எந்த எதிர்ப்பும் வரவில்லை. டங்ஸ்டன் சுரங்கம் ஏலம் விடப்படுவதை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழக அரசிடமிருந்து எந்த கோரிக்கையும் வரவில்லை" என்று மத்திய அரசு கூறியிருக்கிறது. டங்ஸ்டன் சுரங்கம் ஏலத்தில் விடப்படுவது குறித்த விவரங்களை தமிழக அரசுக்கு மத்திய அரசு ஏற்கனவே தெரிவித்திருக்கிறது. அப்போதெல்லாம் எந்த எதிர்ப்பையும் தமிழக அரசு தெரிவிக்கவில்லை. இன்னும் கேட்டால் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து தமிழக அரசே டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு கடந்த ஆண்டே மத்திய அரசின் அனுமதியை தமிழக அரசு கோரியிருக்கிறது. இப்படியாக அரிட்டாப்பட்டியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கு அனைத்து வழிகளிலும் துணை போன திராவிட மாடல் அரசு இப்போது மக்களிடம் கடுமையான எதிர்ப்பு எழுந்த பிறகு அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதைப் போல நாடகமாடுகிறது. திமுக எப்போது ஆட்சிக்கு வந்தாலும் மக்கள் நலனைவிட தங்களின்நலனுக்கே முன்னுரிமை அளிக்கும். காவிரி பாசன மாவட்டங்களில் மீத்தேன் எரிவாயு ஆய்வுக்கு அனுமதி அளித்தது,தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை விரிவாக்கத்திற்கு ஒப்புதல் அளித்தது என திராவிட மாடல் அரசு மக்களுக்கு செய்த துரோகங்களுக்கு ஏராளமான எடுத்துக் காட்டுகளைக் கூறலாம். அரிட்டாப்பட்டி டங்ஸ்டன் சுரங்க விவகாரத்திலும் இப்போது அதே துரோகத்தை திமுக அரசு செய்கிறது. அரிட்டாப்பட்டி மக்களின் உணர்வுகளை மதித்து அங்கு டங்ஸ்டன் சுரங்கம் அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டும் என்றார்.

# புயல் எதிரொலி: கடலுக்கு செல்ல ராமேசுவரம் மீனவர்களுக்கு நீடிக்கும் தடை

மண்டபம், டிச.2

வங்கக்கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் பெஞ்சல் புயலாக மாறியுள்ளது. இதன் காரணமாக தமிழ்நாட்டிற்கு குறிப்பாக 7 மாவட்டங்களில் இன்று 'ரெட் அலர்ட்' எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இன்று மாமல்லபுரம் மற்றும்காரைக்கால்இடையே புயல் கரையைக் கடக்கும் நிலையில் 95 கிலோ மீட்டர் வேகத்தில் சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் கடலோர பகுதிக்கு செல்ல வேண்டாம் என அரசு அறிவுறுத்தி உள்ளது. வங்கக் கடலில் உருவான புயல் சின்னத்தால் கடந்த 4 நாட்களாக ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரம், பாம்பன், தங்கச்சிமடம், மண்டபம் பகுதியில் சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. ராமேசுவரம்,



பாம்பன் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டு ராட்சத அலைகள் எழுந்து கடற்கரையில் ஆக்ரோஷமாக மோதின.இதில் பாம்பன் கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த நாட்டுப்படகுகள் ஒன்றோடு ஒன்று மோதி சேதமடைந்தது குறிப்பிடத்தக்கது. பாம்பன் தெற்குவாடி, லைட்ஹவுஸ் தெரு கடலோரத்தில் உள்ள மீனவர் குடிசை வீடுகள், அலைகளால் மோசமாக சேதமாகியது.வங்கக் கடலில் உருவான புயலால் நேற்று மதியம் பாம்பன் துறைமுக அலுவலகத்தில் 3ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. இதையடுத்து பாம்பன் கடற்கரையில் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தவும், மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டது. ஏற்கனவே கடந்த 24ந்தேதி முதல் ராமேசுவரம் தீவு பகுதி மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல மீன் வளத்துறையினர் தடை விதித்தனர். அந்தத் தடை இன்றுவரை நீடித்து வருகிறது. இன்று புயல் கரையை கடக்கும் பட்சத்தில் நாளை மண்டபம் மற்றும் பாம்பன் தெற்கு பகுதியில் மீனவர்கள் கடற்கரை செல்ல அனுமதி வழங்கப்படலாம் என்று தெரிகிறது. மீன் பிடிக்கத்தடை விதிக்கப்பட்டுள்ளதால் ராமேசுவரம், பாம்பன் மண்டபம் பகுதியில் சுமார் 1,600 விசைப்படகுகள் மற்றும் நாட்டுப்படகுகள் கரையில் நிறுத்தப்பட்டு உள்ளன.பெஞ்சல் புயல் எதிரொலியாக கடந்த ஒரு வார காலமாக ராமேசுவரம், பாம்பன், மண்டபம் மீனவர்கள்கடலுக்கு செல்லாததால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

# பெஞ்சல் புயல் பாதிப்பு திமுகவில் உதவிக்கு வார் ரூம்




சென்னை, டிச.2

திமுக தலைமை கழகம் வெளியிட்ட அறிவிப்பு: பெஞ்சல் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு முழு வேகத்தில் செயல்படுத்தி வருகிறது. நேற்று முன்தினம் இரவு முதல் மழை பெய்தாலும் இதுவரையிலும் பெரிய அளவில் பாதிப்புகள் இல்லை.

எனினும் முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி திமுக தலைமைக்கழகத்தில் வார் ரூம் தயார் நிலையில் உள்ளது. உதவிகள் தேவைப்படுகிறவர்கள் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

மாநில உதவி எண்: 1070 வாட்ஸப்: 944869848, சென்னை மாநகராட்சி, உதவி எண்: 1913. திமுக தலைமைக்கழக வார் ரூம்:8069446900. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கந்தூரி விழாவை முன்னிட்டு தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் இருந்து நாகூருக்கு 100 சிறப்பு பஸ்கள் இயக்கம்

தஞ்சாவூர், டிச.2

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம் நிர்வாக இயக்குனர் பொன்முடி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் தர்கா கந்தூரி விழா வருகிற 2ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி 11ந் தேதி சந்தனகூடு நிகழ்ச்சி நடைபெற உள்ளது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து நாகூர் கந்தூரி திருவிழாவை காண ஏராளமான பொதுமக்கள் வருகைதர உள்ளனர். அதனை முன்னிட்டு 100 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது. இன்று (ஞாயிறு) முதல் 12ந்தேதி வரை



சென்னை, திருச்சி, கரூர், புதுக்கோட்டை, மதுரை, சிதம்பரம், இராமநாதபுரம், தஞ்சாவூர், கும்பகோணம்

ஆகிய ஊர்களிலிருந்தும், நாகப்பட்டினம் நாகூர் மற்றும் காரைக்கால் நாகூர் வழித்தடத்திலும் இந்த சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளது.மேலும், தற்காலிக வாகன நிறுத்தம் தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்திலிருந்து நாகப்பட்டினம் தொழிற்பயிற்சி நிலையமைதானம் வாகன நிறுத்தம், வெண்ணாற்றாங்கரை வாகன நிறுத்தம் மற்றும் இரயில் நிலையம் ஆகிய இடங்களை இணைக்கும் வகையில் வட்ட பஸ் இயக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தினசரி இயக்கப்பட்டு வரும் 127 பஸ்கள் வாயிலாக 335 நடைகளுடன் 2ந்தேதி மற்றும் 11ந்தேதி அன்று கூடுதலாக 100 சிறப்பு பஸ்கள் இயக்கிடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு பஸ் இயக்கத்தினை ஒருங்கிணைக்க நாகூர் மற்றும் நாகப்பட்டினம் பஸ் நிலையங்களில் விசாரணைமையங்கள் அமைக்கப்பட்டு கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே இச்சிறப்பு பஸ் சேவையை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வைகை அணையில் இருந்து சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு தண்ணீர் திறப்பு



ஆண்டிபட்டி, டிச.2

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகில் உள்ள 71 அடி உயரம் உள்ள வைகை அணையின் நீர்மட்டம் வடகிழக்கு பருவமழை காரணமாக இந்த மாத தொடக்கத்தில் 65 அடியை எட்டியது.முழு கொள்ளளவை எட்டும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ராமநாதபுரம் மாவட்ட பூர்வீக பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அதன்பிறகு மழை அளவு படிப்படியாக குறையத் தொடங்கியது. முல்லைபெரியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் மற்றும் அவ்வப்போது பெய்யும் மழை நீரால் வைகை அணையின் நீர்மட்டம் இன்றுகாலைநிலவரப்படி 56.56 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 568 கன அடி தண்ணீர் வருகிறது. தற்போது மதுரை மாநகர் குடிநீர் தேவைக்காக மட்டும் 69 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

நீர் இருப்பு 2978 மி.கன அடியாக உள்ளது.இந்நிலையில் வைகை அணையில் இருந்து சிவகங்கை, விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு கிருதுமால் உபவடி நிலத்திற்கு குடிநீர் தேவைக்காக சிறப்பு நிகழ்வாக தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி வைகை அணையில் கூடுதல் இருப்பாக உள்ள 1.68 டி.எம்.சி. தண்ணீரில் நாளை முதல் 8 நாட்களுக்கு வினாடிக்கு 650 கன அடி வீதம் 0.45 டி.எம்.சி.க்கு மிகாமல் தண்ணீரின் இருப்பு மற்றும் வரத்தை பொறுத்து நீர் திறந்து விடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். முல்லைபெரியாறு அணையின் நீர்மட்டம் 120.15 அடியாக உள்ளது. வரத்து 320 கன அடி. திறப்பு 755 கன அடி. இருப்பு 2658 மி.கன அடியாக உள்ளது.மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 53.20 அடியாக உள்ளது. வரத்து 54 கன அடி. திறப்பு 100 கன அடி. இருப்பு 399.31 மி.கன அடி. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 122.83 அடி. வரத்து 11.5 கன அடி. திறப்பு 30 கன அடி. இருப்பு 94.34 மி.கன அடி. சண்முகாநதி அணை நீர்மட்டம் 50.40 அடி. வரத்து இல்லாத நிலையில் பாசன தேவைக்காக 15 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. நீர் இருப்பு 72.78 அடியாக உள்ளது.சோத்துப்பாறையில் 2.6, பெரியாறு அணையில் 1.4, தேக்கடி 3.8 மி.மீ. மழை அளவு பதிவானது.

## பொதுமக்கள் வெளியே வர வேண்டாம் அமைச்சர் அறிவுறுத்தல்



சென்னை, டிச.2

சென்னை எழிலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார். ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்ட மாவட்டங்களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கலெக்டரிடம் கேட்டு அறிந்தார்.சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர்களிடம் நிலவரங்கள் கேட்டு அறிந்த முதலமைச்சர், மழை முன் எச்சரிக்கை பணிகளை துரிதப்படுத்துமாறு உத்தரவிட்டார்.

இந்நிலையில் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:★ இன்றிரவு காற்றும் மழையும் அதிகரிக்கும் என்பதால் கூடுதல் முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.★ சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட மாவட்ட கலெக்டர்கள் துரிதமாக செயல்பட முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.★ கனமழையை எதிர்கொள்ள சென்னையில் மட்டும் 10,000 நபர்களும் ஒட்டுமொத்தமாக 25,000 பேர் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னையில் வசிக்கும் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம். இன்று தொடங்கி நாளை காலை வரை பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வரவேண்டாம்.

காற்றும் மழையும் அதிகமாக இருக்கும் என்பதால் முன் எச்சரிக்கையாக அவர் அறிவுறுத்தினார்.

## கடுங்குளிர், சாரல் வெறிச்சோடியது கொடைக்கானல்



கொடைக்கானல், டிச.2

திண்டுக்கல் மாவட்டத்தில் மலைகளின் இளவரசி என அழைக்கப்படும் கொடைக்கானலில் வார விடுமுறையை கொண்டாட சனி, ஞாயிறு கிழமைகளில் சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருகை தருவது வழக்கம். கொடைக்கானலில் கடந்த சில நாட்களாக பலத்த சூறைக்காற்றுடன் சாரல் மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கொடைக்கானலில் கடும் குளிர் நிலவி வருகிறது. மாலையிலே துவங்கி விடும் இந்த கடும் குளிர் மறுநாள் விடியும் வரை நீடிக்கிறது.

இந்த சீதோஷ்ண நிலையால் நேற்று வார விடுமுறை நாளிலும் சுற்றுலாப்பயணிகளின் வருகை வழக்கத்தை விட குறைவாகவே இருந்தது. இதனால் சுற்றுலா இடங்கள் அனைத்தும் வெறிச்சோடி காணப்படுகிறது. மேலும் பெஞ்சல் புயல் காரணமாகவும் தமிழகத்தின் வடக்கு மாவட்டங்களிலிருந்து சுற்றுலாப்பயணிகள் வருகை குறைந்துள்ளது. அதேநேரம் கொடைக்கானல் வந்துள்ள வடமாநில புதுமண தம்பதியினர் கப்பிள்ஸ் சீசனை வெகுவாக அனுபவித்து வருகின்றனர்.

## வதிலை. பெண் யானையின் கோரைப்பற்களை விற்க முயன்ற 3 பேர் கைது; 2 கோரைப்பற்கள் பறிமுதல்



வத்தலகுண்டு, டிச.2

திண்டுக்கல், வத்தலகுண்டுவில் இருந்து மதுரை செல்லும் சாலையில் தனியார் பாலிடெக்னிக் கல்லூரி அருகே பெண் யானையின் கோரைப்பற்களை விற்க முயற்சிப்பதாக மதுரை வன குற்றப்பிரிவு அதிகாரிகள் மற்றும் வத்தலகுண்டு வனத்துறையினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு விரைந்து சென்ற வனத்துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு பெண் யானையின் கோரை பற்களை விற்பனைக்காக வைத்திருந்த வால்பாறையை சேர்ந்த சசிகுமார்(36), கொடைக்கானலை சேர்ந்த ஜெயராமன்(74) வீரக்கல்லை சேர்ந்த செல்லத்துரை(49) ஆகிய 3 பேரை கைது செய்து அவர்களிடமிருந்து 2 பெண் யானையின் கோரப் பற்களை பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## சேலம் ஆவினில் இருந்து சென்னைக்கு 30 ஆயிரம் லிட்டர் பால் அனுப்பி வைப்பு




சேலம், டிச.2

சேலம் ஆவினில் இருந்து சென்னைக்கு 30ஆயிரம் லிட்டர் பால் பாக்கெட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பெஞ்சல் புயலால் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளான திருவள்ளூர்,

காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது. இதனால், சாலைகள், வீடுகள் அனைத்தும் மழை நீர் சூழ்ந்து, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியுள்ளது. மழை வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் தண்ணீரை வெளியேற்றும் பணியில், மாநகராட்சி நிர்வாகம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

இதனிடையே, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆவின் பால் தட்டுபாடு ஏற்படாமல் இருக்கும் வகையில், ஆவின் நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன்படி, சேலம் ஆவினில் இருந்து, நேற்று முன்தினம் 15 ஆயிரம் லிட்டர் பால் பாக்கெட்டுகள் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. நேற்றும் 15 ஆயிரம் லிட்டர் பால் பாக்கெட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற மாவட்டங்களில் நிலைமை சீரடையும் வரை,

சேலம் ஆவினில் இருந்து பால் பாக்கெட்டுகள் அனுப்பி வைக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நிர்வாகம் பொறுப்பல்ல.. மறுபடியும் எச்சரிக்கை விடுத்த மெட்ரோ நிர்வாகம்




சென்னை, டிச.2

வங்கக்கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் மாமல்லபுரம் மரக்காணம் இடையே கரையை கடக்கிறது.இதனால்சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் கன மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்து இருந்தது.இதனை தொடர்ந்து சென்னையில் மிதமான மழை பெய்யத் தொடங்கி இன்று காலை முதல் கனமழை பெய்து வருகிறது. இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கி உள்ளது. மழை நீரை அகற்றும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டாலும் தொடர் மழை காரணமாக மழை நீர் தேங்குகிறது.

இந்த நிலையில், பரங்கிமலை மெட்ரோ ரெயில் நிலைய பகுதிகளில் நீர் மட்டம் உயர்ந்து வருவதால் பார்க்கிங்கில் நிறுத்தப்பட்ட வாகனங்களை உடனடியாக எடுக்க வேண்டும்என்றுமெட்ரோ நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது. மேலும் வாகனங்கள் பழுதானால் அதற்கு நிர்வாகம் பொறுப்பேற்காது எனவும் தெரிவித்துள்ளது. முன்னதாக, கோயம்பேடு, பரங்கிமலை, அரும்பாக்கம் மெட்ரோ ரெயில் நிலைய பார்க்கிங் இடங்களில் மழை நீர் தேங்க வாய்ப்புள்ளதால் பயணிகள் அதனை பயன்படுத்த வேண்டாம் என தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

## எய்ட்ஸ் தொற்று இல்லா நிலையை உருவாக்க உறுதியேற்போம்: மு.க.ஸ்டாலின் தகவல்




செனை, டிச.2

ஒவ்வொரு தனி மனிதனின் தனிப்பட்ட உரிமைகளை அங்கீகரிப்பதன் மூலமே, எச்.ஐ.வி/எய்ட்சை முழு அளவில் கட்டுப்படுத்த முடியும் என்பதே அதன் பொருளாகும். தமிழ்நாட்டில் எச்.ஐ.வி தொற்றின் தாக்கம் தேசிய அளவான 0.23 விழுக்காட்டில் இருந்து 0.16 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. சென்னை:முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: பொதுமக்களிடையே எச்.ஐ.வி./எய்ட்ஸ் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 1ந் தேதி "உலக எய்ட்ஸ் தினமாக" அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான உலக எய்ட்ஸ் தின கருப்பொருள் "Take the Rights Path", அதாவது, "உரிமைப் பாதையில்" என்பதாகும். ஒவ்வொரு தனி மனிதனின் தனிப்பட்ட உரிமைகளை அங்கீகரிப்பதன் மூலமே, எச்.ஐ.வி/எய்ட்சை முழு அளவில் கட்டுப்படுத்த முடியும் என்பதே அதன் பொருளாகும்.தமிழ்நாடு அரசு மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் இணைந்து, எச்.ஐ.வி தடுப்புப் பணியினை திறம்பட செயல்படுத்திய காரணத்தால், தமிழ்நாட்டில் எச்.ஐ.வி தொற்றின் தாக்கம் தேசிய அளவான 0.23 விழுக்காட்டில் இருந்து 0.16 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் எச்.ஐ.வி/எய்ட்ஸ்தொற்று இல்லா நிலையினை உருவாக்கிட உறுதியேற்று எச்.ஐ.வி/எய்ட்ஸ்தொற்று உள்ளோரும் நம்மில் ஒருவரே என்பதை மனதில் கொண்டும், அவர்களை மனித நேயத்துடன் அரவணைத்து ஆதரிக்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கி றேன்.இவ்வாறு அவர் கூறி உள்ளார்.


## நெல்லை-தாம்பரம், மேட்டுப்பாளையம் சிறப்பு ரெயில்கள் மேலும் 2 மாதங்களுக்கு நீட்டிப்பு

நெல்லை, டிச.2

தென்னக ரெயில்வேயின் மதுரை கோட்டத்தில் ரெயில் பயணிகள்நலச்சங்கத்தினர் கோரிக்கையை ஏற்று கோடை விடுமுறை மற்றும் பண்டிகை கால கட்டங்களில் தென் மாவட்டங்களுக்கு ஏராளமான சிறப்பு ரெயில்கள் இயக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் நெல்லை மேட்டுப்பாளையம் இடையே திங்கட்கிழமை தோறும் இயக்கப்படும் வண்டி எண். 06030 வாராந்திர சிறப்பு ரெயில் நெல்லையில் இருந்து மாலை 7 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 7.30 மணிக்கு மேட்டுப்பாளையத்தை சென்றடைகிறது.

இதே போல மேட்டுப்பாளையம் நெல்லை இடையே திங்கட்கிழமை தோறும் இயக்கப்படும் வாராந்திர சிறப்பு ரெயில் வண்டி எண். 06029 மேட்டுப்பாளையத்தில்இருந்து மாலை 7.45 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 7.45 மணிக்கு நெல்லையை சென்றடையும்.அம்பை, தென்காசி, சிவகாசி, மதுரை, பழனி, பொள்ளாச்சி, கோவை வழியாக இயக்கப்படும் இந்த ரெயிலை மேலும் 2 மாதங்களுக்கு நீட்டித்து ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது. இதற்கான முன்பதிவு இன்று காலை முதல் தொடங்கியது. இதேபோல் நெல்லை சென்னை எழும்பூர் இடையே விருதுநகர், காரைக்குடி, பட்டுக்கோட்டை, திருவாரூர், விழுப்புரம் , தாம்பரம் வழியாக இயக்கப்படும் சிறப்பு ரெயில் (வண்டி எண்: 0607006069) மேலும் 2 மாதங்கள் நீட்டிக்கப்பட்டு உள்ளது.தாம்பரம் நாகர்கோவில் இடையே வள்ளியூர், நெல்லை, விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருச்சி, விழுப்புரம் வழியாக இயக்கப்பட்டு வரும் சிறப்பு ரெயில் (வண்டி எண் 0601206013) மேலும் 2 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த ரெயில்களுக்கும் இன்று முதல் முன்பதிவு தொடங்கி உள்ளது. இந்த ரெயில்கள் நீட்டிப்பு மூலம் கிறிஸ்துமஸ், பொங்கல் பண்டிகைகளுக்கு சொந்த ஊருக்கு வந்து செல்லும் தென்மாவட்ட பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கனமழை எதிரொலி செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் உயர்வு



சென்னை, டிச.2

தென்மேற்கு வங்கக்கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் சூறைக்காற்றுடன் மழை பெய்து வருகிறது.இந்நிலையில் கனமழை காரணமாக செம்பரம்பாக்கம் ஏரிக்கு வரும் நீர்வரத்து பன்மடங்கு அதிகரித்துள்ளது.

செம்பரம்பாக்கம் ஏரிக்கு இன்று காலை 449 கனஅடி நீர் வந்த நிலையில் தற்போது நீர்வரத்து 3,745 கனஅடியாக உயர்ந்துள்ளது.

ஒரு மணி நேரத்துக்கு முன்னால் செம்பரம்பாக்கம் ஏரிக்கு 2,773 கனஅடி நீர் வந்த நிலையில் தற்போது நீர்வரத்து 3,745 ஆக உயர்ந்துள்ளது.

## வடிகால் பணிகள் வெறும் போட்டோஷூட் தான் எடப்பாடி பழனிசாமி கடும் விமர்சனம்



சென்னை, டிச.2

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்ஃபெஞ்சல் புயல் காரணமாக சென்னையில் கனமழை பெய்து வருகிறது.

மக்கள் அனைவரும் சென்னை வானிலை ஆய்வு மையம் அளிக்கும் தகவல்கள் அடிப்படையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மழைநீர் வடிகால் பணிகள் என்று திமுக ஆட்சியாளர்கள் எடுத்த போட்டோஷூட் கள்வெற்று விளம்பரங்கள் தான் என்பதை இன்றைய சென்னையின் சாலைகள் அம்பலப்படுத்தியுள்ளன. இனி இவர்களை நம்பி எந்தப் பயனும் இல்லை!எனவே, எனது அறிவுறுத்தலின்படி, @AIADMKITWINGOFL சார்பில் #RapidResponseTeam அமைக்கப்பட்டுள்ளது. சென்னைவாழ் பொதுமக்கள் இந்த கடுமையான தருணத்தில் தங்களுக்கு தேவையான உதவிகளுக்கு கழகத் தன்னார்வலர்களை எந்நேரமும் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்துள்ளார்.

தினகனி



# நாகூர் தர்கா கந்தூரி விழா 5 மினராக்களில் பாய்மரம் ஏற்றம்: 100 சிறப்பு பஸ்கள் இயக்கம்

நாகப்பட்டினம், டிச.2

புகழ்பெற்ற நாகூர் ஆண்டவர் தர்கா கந்தூரி விழாவை முன்னிட்டு 5 மினராக்களில் நேற்று பாய்மரம் ஏற்றப்பட்டது. புகழ்பெற்ற நாகூர் ஆண்டவர் தர்கா தமிழகத்தில் மிகப்பெரிய தர்கா ஆகும். இந்த தர்காவிற்கு வெளிமாவட்டம், வெளி மாநிலங்களில் இருந்து தினந்தோறும் ஏராளமான யாத்ரீகர்கள் வந்து செல்கின்றனர். மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக திகழும் நாகூர் தர்காவில் அடங்கியிருக்கும் பெரிய ஆண்டவர் கந்தூரி விழா ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும். இதன்படி இந்த ஆண்டு 468வது கந்தூரி விழா நாளை (2ம் தேதி) கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.



வரும் 11ம் தேதி சந்தன கூடு ஊர்வலம், 12ம் தேதி அதிகாலை சந்தனம் பூசும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. இதை முன்னிட்டு புகழ் பெற்ற நாகூர் ஆண்டவர் தர்காவில் உள்ள 5 மினராக்கள் நேற்று பாய்மரம் ஏற்றும் நிகழ்ச்சி நடந்தது. முதலில் சாஹிப் மினராவில் பழக்கவழக்கப்படி பாய்மரம் ஏற்றப்பட்டது. பின்னர் தஞ்சாவூர் மகராஜா கட்டி கொடுத்த பெரிய மினராவில் பாய்மரம் ஏற்றப்பட்டது. இதை தொடர்ந்து தலைமாட்டு மினரா, ஓட்டுமினரா, முதுபக்மினரா ஆகிய மினராக்களில் பாய்மரம் ஏற்றப்பட்டது.

கந்தூரி விழா ஏற்பாடு களை நாகூர் ஆண்டவர் தர்கா மானேஜிங் டிரஸ்டி செய்யது முஹம்மத் காஜி ஹூஸைன் சாஹிப் மற்றும் போர்டு ஆப் டிரஸ்டிகள் நிர்வாகத்தினர் செய்து வருகின்றனர். நாகூர் தர்கா பிரசிடெண்ட் செய்யது முஹம்மது கலிபா சாஹிப் மற்றும் ஆலோசனை குழு உறுப்பினர்கள் முன்னிலையில் பாய்மரம் ஏற்றும் நிகழ்ச்சி தொடங்கியது. இதில் ஏராளமான யாத்ரீகர்கள் கலந்து கொண்டனர். நாகூர் தர்கா பிரசிடெண்ட் செய்யது முஹம்மது கலிபா சாஹிப் நிருபர்களிடம் கூறுகையில், 'நாகூர் ஆண்டவர் தர்கா கந்தூரி விழா ஏற்பாடுகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்தார்.

இதன் அடிப்படையில் இந்த ஆண்டு நாகூர் ஆண்டவர் தர்கா கந்தூரி விழாவிற்காக பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. முதல்வர் உத்தரவின் பேரில் முதல் முறையாக 100சிறப்புபேருந்து விடப்பட்டுள்ளது. அதே போல் சிறுபான்மை நலத்துறை அமைச்சர் நாசர் தினந்தோறும் அனைத்து துறைகளையும் தொடர்பு கொண்டு கந்தூரி விழா ஏற்பாடுகளை கேட்டறிந்து ஆலோசனை வழங்கி சிறந்த முறையில் பணிபுரிந்து வருகிறார். நாகப்பட்டினம் நகராட்சி அடிப்படை வசதிகளை செய்து தந்துள்ளது. இதற்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்' என்றார்.

# தமிழகத்தில் புயலால் நிகழ்ச்சி ரத்து ஜனாதிபதி முர்மு டெல்லி திரும்பினார்: மோசமான வானிலையால் ஊட்டியில் இருந்து கோவை விமான நிலையத்துக்கு காரில் சென்றார்

ஊட்டி, டிச.2

நான்கு நாட்கள் பயணமாக தமிழகம் வந்திருந்த ஜனாதிபதி திரவுபதி முர்மு, புயல் காரணமாக நிகழ்ச்சியை ரத்து செய்துவிட்டு டெல்லி திரும்பினார். ஜனாதிபதி திரவுபதி முர்மு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக 4 நாள் அரசு முறை பயணமாக கடந்த 27ம் தேதி டெல்லியில் இருந்து தமிழகம் வந்தார். ஊட்டி ராஜ்பவன் மாளிகையில் தங்கிய அவர், 28ம் தேதி கார் மூலம் குன்னூர் வெலிங்டன் பகுதியில் அமைந்துள்ளடிஎஸ்எஸ்சி எனப்படும் ராணுவ அதிகாரிகள் பயிற்சி கல்லூரிக்கு சென்று அங்கு பயிற்சி அதிகாரிகள் மத்தியில் உரையாற்றினார்.

ஊட்டியில் உள்ள ராஜ்பவனில்நடந்தநிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட தோடர், கோத்தர் உள்ளிட்ட 6 வகை பழங்குடியின மக்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினார். நேற்று திருவாரூரில் உள்ள தமிழ்நாடு மத்திய பல்கலைகழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதாக இருந்தது. ஆனால், பெஞ்சல் புயல் காரணமாக அங்கு கனமழை பெய்து வருவதால் ஜனாதிபதியின் திருவாரூர் பயணம் ரத்து செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து நேற்று காலை 9.50 மணியளவில் ஊட்டி ராஜ்பவன் வளாகத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடந்தது. இதில், கலந்து கொண்டு மரக்கன்றுகளை ஜனாதிபதிதிரவுபதிமுர்மு நட்டு வைத்தார். நேற்றும் வானிலை மிகவும் மோசமாக இருந்த நிலையில், அவர் ஹெலிகாப்டர் மூலம் கோவை செல்வது ரத்து செய்யப்பட்டது. காலை 10.10 மணியளவில் ஊட்டி ராஜ்பவன்



மாளிகையில் இருந்து காரில் புறப்பட்டு கோத்தகிரி வழியாக கோவை புறப்பட்டார்.

அவரை கவர்னர் ஆர். என்.ரவி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மெய்யநாதன்,மாவட்டகலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் வழி அனுப்பி வைத்தனர்.

ஜனாதிபதி புறப்பட்ட நேரத்தில் ஊட்டிகோத்தகிரி சாலையில் மிகவும் மோசமான காலநிலை நிலவியது. கடும் மேக மூட்டம் மற்றும் சாரல் மழைபெய்தது. இதனால், எதிரே வரும் வாகனங்கள் தெரியவில்லை. எனவே, முகப்பு விளக்குகளை எரியவிட்ட படியும், மிகவும் குறைந்த வேகத்திலும் ஜனாதிபதி கார் உட்பட பாதுகாப்பு அதிகாரிகளின் வாகனங்கள் சென்றன.

இதனால், சற்று தாமதமாக மேட்டுப்பாளையம் சென்றார். மேட்டுப்பாளையத்தில் உள்ள வனக்கல்லூரி ஓய்வு விடுதியில் தேநீர் அருந்திய பின் மீண்டும் கோவை விமான நிலையத்திற்கு கார் மூலம் சென்றார்.

ஜனாதிபதி சாலை மார்க்கமாக சென்றதை தொடர்ந்து, ஊட்டிகோத்தகிரி மற்றும் கோத்தகிரி மேட்டுப்பாளையம் சாலையில் 2 மணி நேரம் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மேலும், இச்சாலையில் பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.

# கடலோர மாவட்டங்கள் பாதிப்பு போர்க்கால அடிப்படையில் மீட்பு பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும்: பாலகிருஷ்ணன் வலியுறுத்தல்

சென்னை, டிச.2

போர்க்கால அடிப்படையில் மீட்பு பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். இது குறித்து மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பாலகிருஷ்ணன் தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாகவே, நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களில் கடும் மழைப்பொழிவு இருந்து வருகிறது. இந்த நிலையில், வங்கக்கடலில் உருவாகியுள்ள பெஞ்சல் புயல், வெள்ள பாதிப்புகளை மேலும் அதிகரித்துள்ளது.



தொடர் மழை மற்றும் புயல் பாதிப்புகள் தொடரும் நிலையில்,

மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளை வேகப்படுத்த வேண்டும் குறிப்பாக, திருவாரூர் மாவட்டத்தின் முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி ஆகிய பகுதிகளில் தொடர் மழையால் பயிர்கள் மூழ்கியுள்ளன.

நாகை மாவட்டத்தில் அறுவடைக்கு தயாராக இருந்த குறுவை சாகுபடி பெருமளவு பாதித்துள்ளது. சில இடங்களில் 80% வரை பாதிப்பு இருக்கிறது.

மீனவர்கள், புயல் காரணமாக வலைகள் அறுந்தும், படகுகள் சேதமாகியும் வாழ்வாதாரத்தை இழந்திருக்கிறார்கள்.

வீடுகள்உடைமைகளை இழந்திருப்பதுடன், வருமான வாய்ப்புகளும் அற்றுப் போயுள்ளார்கள். 16வது நிதி ஆணையத்தின் முன் தமிழ்நாடு அரசு வைத்துள்ள கோரிக்கையை ஏற்று, காலநிலை சார்ந்த அளவுகோலையும் நிதிப்பங்கீட்டில்இணைத்திட வேண்டும்.

# நெல்லை நாதக செயலாளர், நிர்வாகிகள் கூண்டோடு விலகல்: சீமான் அடிமையாக்குவதாக குற்றச்சாட்டு

நெல்லை, டிச.2

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது அடுக்கடுக்கான குற்றசாட்டுகளை கூறி பல்வேறு மாவட்ட செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் விலகி வருகின்றனர். பல மாவட்டங்களில் கூண்டோடு வெளியேறிய நிர்வாகிகள், சீமானுக்கு எதிராக புதிய இயக்கத்தை தொடங்கி உள்ளனர். நெல்லையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு நடத்திய ஆய்வுக் கூட்டத்தில் பேச முயன்ற நிர்வாகிகள் வெளியேற்றப்பட்டனர். அப்போது நிர்வாகிகள் சீமான் மீது அடுக்கடுக்கான புகார் தெரிவித்தனர்.

இந்நிலையில் நாம் தமிழர் கட்சியின் நெல்லை மத்திய மாவட்ட செயலாளர் கண்ணன், இளைஞரணி மாவட்ட செயலாளர் பார்வின்உள்பட 55 நிர்வாகிகள், கட்சியில் இருந்து விலகுவதாக நெல்லையில் நேற்று காலை தெரிவித்தனர். இதுகுறித்து மாவட்ட செயலாளர் கண்ணன், இளைஞரணி மாவட்ட செயலாளர் பார்வின் ஆகியோர் கூட்டாக அளித்த பேட்டி: தமிழ் தேசியம், தமிழர் என்ற கண்ணோட்டத்துடன் கட்சிக்கு வந்தோம். ஆனால் சீமான் இன்று ஒன்று.... நாளை ஒன்று என முரணாக பேசுகிறார்.

நிர்வாகிகள் யாருக்கும் மரியாதையாக மேடையில் பேசுவதில்லை. ஒருமையில் பேசுகிறார். அவருக்கு கொள்கை இல்லை. அவரது கட்சியில் அடிமையாக இருக்க வேண்டியுள்ளது. . ரஜினியை முதலில் கேவலமாக பேசினார். அவரை சந்தித்து விட்டு வந்து நண்பர் என்கிறார். சங்கி என்றால் நண்பர் என்கிறார். நடிகர் விஜய்யை முதலில் நண்பர் என்று கூறினார். அவரது மாநாட்டிற்கு பிறகு ரோட்டில் அடிபட்டு சொத்து போ.... என்கிறார். நாங்கள் கட்சிக்காக ரூ.15 லட்சத்திற்கும் மேல் செலவு செய்தோம். ஆனால் வெளியே போ என்கிறார். எங்களது உழைப்பில் தான் 86 ஆயிரம் ஓட்டுக்கள் நெல்லை தொகுதியில் கிடைத்தது. கட்சிக்காக உழைத்து எங்களது உழைப்பையும், பொருளாதாரத்தையும் இழந்தது தான் மிச்சம். இதனால் தொகுதி, பகுதி நிர்வாகிகள் என 55 பேர் ஒட்டுமொத்தமாக விலகுகிறோம். இவ்வாறு தெரிவித்தனர்.

# 'சொர்க்கவாசல்' படத்தின் முதல் நாள் வசூல் விவரம்



'நானும் ரவுடிதான், எல்.கே.ஜி, மூக்குத்தி அம்மன், ரன் பேபி ரன், புகழ்' போன்ற படங்களில் நடித்து பிரபலமடைந்தவர் நடிகர் ஆர். ஜே.பாலாஜி. நயன்தாரா நடிப்பில் வெளிவந்த 'மூக்குத்தி அம்மன்' படத்தின் மூலம் இயக்குனனராக அறிமுகமானார். அவரே இயக்கி நடித்த 'சிங்கப்பூர் சலூன்' படம் வெளியாகி கலவையான விமர்சனங்களைப் பெற்றது. தற்போது நடிகர் சூர்யாவின் 45வது படத்தை இயக்குகிறார்.

இவர் தற்போது பா. ரஞ்சித்தின் உதவி இயக்குநர் சித்தார்த் விஸ்வநாத் இயக்கத்தில் 'சொர்க்கவாசல்' என்ற படத்தில்நடித்து முடித்துள்ளார். ஸ்வீப் ரைட் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ள இந்தப் படத்தின் கதையை இயக்குனர் உடன் தமிழ்ப் பிரபா, அஸ்வின் ரவிச்சந்திரன் இணைந்து எழுதியுள்ளார்கள். மத்திய சிறைச்சாலையை மையமாக வைத்து 1999ல் நடக்கும் கதையாக இப்படம் உருவாகியுள்ளது. இதில், செல்வராகவன், கருணாஸ், பாலாஜி சக்திவேல், எழுத்தாளர் சோஷா சக்தி உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

இப்படம் நேற்று வெளியானது. இந்த படத்தின் முதல் பாதி உணர்வுப்பூர்வமாக நகர்ந்த நிலையில் இரண்டாம் பாதியில் ரத்தம் தெளிக்கும் வன்முறை காட்சிகள் இடம்பெற்று இருந்தது. இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுவருகிறது. இந்த படம் முதல் நாளில் இந்தியா முழுவதும் ஒரு கோடி ரூபாய் வசூல் செய்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இனிவரும் நாட்களிலும் படத்தின் வசூல் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# சமுத்திரக்கனி நடித்துள்ள திரு மாணிக்கம் படத்தின் புரோமோ வெளியீடு

இயக்குனர் நந்தா பெரியசாமி 'ராஷ்மி ராக்கெட்' என்ற இந்திப் படத்தின் மூலம் மொத்த இந்தியாவையும் கவனம் ஈர்த்தவர். தற்போதுஇவரதுஇயக்கத்தில்சமுத்திரக்கனி நடித்துள்ள திரைப்படம் 'திரு.மாணிக்கம்'. நடிகை அனன்யா இந்த படத்தில் சமுத்திரக்கனிக்கு ஜோடியாக நடித்துள்ளார். மேலும் இயக்குனர் பாரதிராஜா, நாசர், தம்பிராமையா, ஸ்ரீமன், வடிவுக்கரசி, கருணாகரன், இளவரசு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.



'சீதா ராமம்' படத்தின் இசையமைப்பாளர் விஷால் சந்திரசேகர் இந்த படத்திற்கு இசையமைத்துள்ளார். மைனா சுகுமார் ஒளிப்பதிவு செய்துள்ளார். கேரளாவைச் சேர்ந்த குமுளி, மூணாறு, மேகமலை, தேக்கடி உள்ளிட்ட பகுதிகளில் படப்பிடிப்பு நடந்துள்ளது. ஜி.பி.ரவிக்குமார், சிந்தா கோபாலகிருஷ்ண ரெட்டி மற்றும் ராஜா செந்தில் இணைந்து தயாரித்துள்ளனர்.

ஒருமனிதன்இன்றையகாலகட்டத்திலும்நேர்மையாகஇருக்கமுடியுமா? அதற்கானசாத்தியம்இருக்கின்றதா என்பதை பற்றி பேசும் படமாக உருவாகியுள்ளது. சமீபத்தில் இப்படத்தின் முதல் பாடல் மற்றும் டீசர் வெளியாகி இணையத்தில் வைரலானது. இந்த படத்தின் ஓ.டி.டி ரிலீஸ் உரிமையை ஜீ 5 நிறுவனம் வாங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இப்படத்தின் ரிலீஸ் தேதியை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி இத்திரைப்படம் வரும்டிசம்பர்மாதம்20ந்தேதி வெளியாகவுள்ளது. இந்தநிலையில்தற்போது இப்படத்தின்புரோமோவீடியோ வெளியாகி உள்ளது. இந்த வீடியோவை இயக்குனர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# ஐ.எஸ்.எல். கால்பந்து: நார்த் ஈஸ்ட் அணியை வீழ்த்தி ஈஸ்ட் பெங்கால் வெற்றி



11வதுபுரோகபடிலீக்தொடர்கடந்தஅக்டோபர்18ம்தேதிஐதராபாத்தில் தொடங்கியது. இந்த தொடரின் முதற்கட்ட லீக் ஆட்டங்கள் ஐதராபாத்தில் நடந்து முடிந்தன. இதையடுத்து தொடரின் 2வது கட்ட லீக் ஆட்டங்கள் நொய்டாவில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், இந்த தொடரில் இன்று இரவு 9 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் தெலுங்கு டைட்டன்ஸ் ஜெய்ப்பூர்பிங்க்பாந்தர்ஸ்அணிகள்மோதின. இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜெய்ப்பூர் அணி 41-28 என்ற புள்ளிக்கணக்கில் தெலுங்கு டைட்டன்ஸ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

# இலங்கைக்கு எதிரான வெற்றி; டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டியலில் ஏற்றம் கண்ட தென் ஆப்பிரிக்கா



இலங்கை கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடி வருகிறது. இந்த தொடர் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப்புக்கு உட்பட்ட தொடர் ஆகும், இதில் கடந்த 27ம் தேதி தொடங்கிய முதல் ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்கா அணி 233 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இதையடுத்து உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) வெளியிட்டுள்ளது. இதில் இந்தியா (61.11 சதவீதம்) முதல் இடத்தில் தொடர்கிறது. இலங்கைக்கு எதிராக வெற்றி பெற்ற தென் ஆப்பிரிக்கா (59.26 சதவீதம்) 2வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. ஆஸ்திரேலியா (57.69 சதவீதம்) 3வது இடத்திற்கு வந்துள்ளது. நியூசிலாந்து (54.55 சதவீதம்) 4வது இடத்திலும், இலங்கை (50.00 சதவீதம்) 5வது இடத்திலும், இங்கிலாந்து (40.79 சதவீதம்) 6வது இடத்திலும், பாகிஸ்தான் (33.33 சதவீதம்) 7வது இடத்திலும், வெஸ்ட் இண்டீஸ் (26.67 சதவீதம்) 8வது இடத்திலும், வங்காளதேசம் (25.00 சதவீதம்) 9வது இடத்திலும் உள்ளன.

# மகளிர் டி20 கிரிக்கெட்; இங்கிலாந்து அபார பந்துவீச்சு... தென் ஆப்பிரிக்கா 124 ரன்களில் ஆல் அவுட்

இங்கிலாந்து மகளிர் கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20, 3 ஒருநாள் மற்றும் ஒரு டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் ஆடி வருகிறது. இதில் முதலில் டி20 தொடர் நடைபெற்று வருகிறது. இதில் முதல் இரு போட்டிகளில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரில் 20 என முன்னிலையில் உள்ளது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3வது டி20 போட்டி இன்று நடைபெற்று வருகிறது.

இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து தென் ஆப்பிரிக்காவின் தொடக்க ஆட்டக்காரர்களாக பே டன்னிக்லிப் மற்றும் அன்னேக் போஷ் ஆகியோர் களம் இறங்கினர். இதில் அன்னேக் போஷ் ரன் எடுக்காமலும், பே டன்னிக்லிப் 1 ரன்னிலும் அவுட் ஆகினர். தொடர்ந்து அன்னரி டெர்க்சன் மற்றும் சுனே லூஸ் ஆகியோர் ஜோடி சேர்ந்தனர்.

இதில் அன்னரி டெர்க்சன் 19 ரன்னிலும், சுனே லூஸ் 21 ரன்னிலும், அடுத்து களம் இறங்கிய சோலி ட்ரையான் 1 ரன்னிலும் அவுட் ஆகினர். தொடர்ந்து களம் இறங்கிய நொந்துமிசோ ஷங்கசே மற்றும் நாடின் டி கிளர்க் இருவரும் சிறிது நேரம் பொறுமையாக ஆடினர். இதில் நாடின் டி கிளர்க் 19 ரன்னிலும், நொந்துமிசோ ஷங்கசே 31 ரன்னிலும் அவுட் ஆகினர்.

தொடர்ந்து களம் இறங்கிய சினாலோ ஜாப்டா 4 ரன்னிலும், எலிஸ்மாரி மார்க்ஸ் 12 ரன்னிலும், அயன்டா ஹ்லுபி 7 ரன்னிலும் அவுட் ஆகினர். இறுதியில் தென் ஆப்பிரிக்கா அணி 20 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 124 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது.

இங்கிலாந்து தரப்பில் சார்லோட் டீன் 3 விக்கெட்டும், லாரன் பெல் 2 விக்கெட்டும், லாரன் பைலர், ப்ரீயா கெம்ப், சோபி எக்லெஸ்டோன் ஆகியோர் தலா 1 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இதையடுத்து 125 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து ஆட உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.